# 10 எழுத்துருவை தலைப்பு, உபதலைப்பு, பந்திகளாகப் பிரித்து, வடிவமைத்து எழுதுதல்

**இலக்கு**

மாணவர்கள் தெளிவான பொருத்தமான தலைப்புகளை எப்படி எழுதவேண்டும் என்பதையும் தம்முடைய எழுத்தில் தெளிவுண்டாக பந்திகளை எவ்வாறு உருவாக்கவேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ளவேண்டும். தலைப்புகள், துணைத்தலைப்புகள், பந்திகள் ஓர் எழுத்துருவின் கவர்ச்சிக்கு பங்களிக்கின்றன, வாசிப்பினை மிக வைக்கின்றன. விளக்கப் படங்களும் எடுத்துரைப்பும் (அமைப்புத்திட்டம்) அதே நோக்குக்குப் பணியாற்றுகின்றன, மாணவர்கள் இக்கூறுகளுடனான பட்டறிவினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## 1. துல்லியமான கவரக்கூடிய தலைப்புகளை உருவாக்குதல்: கற்பித்தல் யோசனைகள்

3 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
படநூற் கதைகள், செய்தித்தாள் அறிக்கைகள் அல்லது அதே போன்றது

**மாற்றுகள்:**

- ஆசிரியர் வகுப்புக்கு ஒரு கதையை வாசித்து பின்னர் அவ்வெழுத்துருவுக்கு எத்தகைய தலைப்பு பொருத்தமானதாக இருக்குமென வினாவுகிறார். ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒன்று அல்லது இரண்டு தலைப்புகளைப் பரிந்துரைத்து ஒரு தாள் துண்டில் எழுதுகின்றான்/எழுதுகின்றாள். பரிந்துரைகள் பின்னர் கலந்துரையாடப்படுகின்றன: எத்தலைப்புகள் கவர்ச்சியானவை, ஏன்? எவை சலிப்பூட்டுகின்றன, ஏன்?
- ஆசிரியர் பின்னர் அவர்களுடைய தாய்நாட்டில் (அதன் தலைநகர் அல்லது இயற்கை அழகுடைய பகுதிகள் முதலியன) சுற்றுலாவுக்கான சுவரொட்டி அல்லது துண்டுப்பிரசுரம் ஒன்றினை ஆக்குவதற்கான ஒரு (போலியான) திட்டக்கருவினை வழங்குகிறார். இச்சுவரொட்டிக்கான கவர்ச்சியுள்ள தலைப்பு அல்லது (வலம் பார்க்கவும்) கண்ணைக்கவரும் முழக்கம் என்னவாயிருக்கலாம்? (இச்செயற்பாட்டை முடிப்பதற்கு நேரம் இருப்பின், எண்ணக்கருத்தை செயற்படுத்துவது இயல்பானதாகும்.)
- ஆசிரியர் தலைப்பு எதுவுமின்றி ஒரு படக்கதையை, ஒரு செய்தித்தாள் அறிக்கையை, அல்லது ஒரு சிறுகதையை வகுப்பில் பகிர்ந்தளிக்கிறார். மாணவர்கள் தனியாக அல்லது இணையாக கதைக்குத் தெளிவான கவர்ச்சியான தலைப்பினைக் கருத்தில்கொள்ள வேண்டும். பரிந்துரைகள் பின்னர் தாள் துண்டுகளில் எழுதி கலந்துரையாடப்படும்.
- வினா பற்றிய கலந்துரையாடல்கள் (முழு வகுப்பும் அல்லது குழுநிலையில்): தரப்பட்ட எந்தத் தலைப்பில் நீர் ஓர் எழுத்துருவை எழுத விரும்புகிறீர்? இருக்கும் தலைப்புகளையும் பொருள்களையும் எண்ணிப் பார்க்கவும்! பரிந்துரைகள் பின்னர் கலந்துரையாடப்பட்டு, தொகுக்கப்பட்டு, முடியுமாயின், பயிற்சிசெய்யவேண்டும்.
- 4 ஆம் பிரிவிலிருந்து: ஆசிரியர் (முடியுமாயின், வகுப்புடன்), எடுத்துக்காட்டான கவர்ச்சியுள்ள நூல் தலைப்புகளை ஒருங்குசேர்க்கிறார், சில சலிப்புத் தரும் தலைப்புகளைக் கண்டுபிடிக்கிறார், எடுத்துக்காட்டாக ("சுசி, அழகான பெண்", "மலர்க்கவிதைகள்"). தலைப்புகள் கலந்துரையாடப்பட்டு மாணவர்கள் ஒரு தலைப்பு எப்படி சலிப்புத் தருவதாக அல்லது உற்சாகமானதாக அமைகிறது என்பதை உறுதிசெய்ய முயல்கின்றனர்.